*திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உர விலையைக் கூட்டி அறிவித்த ஒரே நாளில், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தமாக மூட்டைகளைப் பல்வேறு தனி நபர்களுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மீது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஏற்கனவே உரம் கையிருப்பு வைத்திருக்கக் கூடிய சங்கங்களுக்கும், மொத்த விற்பனையாளர்களுக்கும் 14-8-1991-லே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பழைய விலைக்கே விற்பனை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) தொட்டியம் தொகுதியில் உள்ள சில பகுதிகளுக்குக் காவிரி குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க சர்வே செய்யும் பணிகள் துவங்கப் பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என். ஆர். சிவபதி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. என். ஆர். சிவபதி.

*திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தொட்டியம் தொகுதியில் உள்ள ஜெமுநாதபுரம், தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப் பாளையம் போன்ற பகுதிகளுக்குக் காவிரி குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க சர்வே செய்யும் பணிகள் துவங்கப் பெறாதது குறித்து'' மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1991 செப்டம்பர் 25] [திரு. டி. எம். செல்வகணபதி]

அறிக்கை.

திருச்சி மாவட்டம், துறையூர் நகராட்சி, தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி, மேட்டுப்பாளையம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி, உப்பிலியாபுரம் பேரூராட்சி மற்றும் 94 வழியோரக் கிராமங்களுக்காக ஜெமுனாதபுரமும் உள்ளடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று காவேரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு ரூ. 1,990.20 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்பக் குழு, வாரியத்தின் ஒப்புதலுக்குப் பிறகு நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காக அரசுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து 21-12-1990ல் அனுப்பப்பட்டுள்ளது.

2. மேற்படி திட்டத்திற்கு அமைப்புச் செலவை ஏற்றுக் கொள்ளும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தீர்மானங்கள் மற்றும் அவைகளின் நிதிநிலை பற்றிய நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சான்று இன்னும் இதுவரை அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை. இவைகளை உடனே அனுப்பும்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவருக்கு ஒரு கடிதம் 31-1-1991 அன்று அனுப்பப்பட்டுள்ளது. நினைவூட்டுக் கடிதங்களும் 25-2-1991, 22-3-1991, 7-6-1991, 9-7-1991, 7-8-1991 மற்றும் 11-9-1991-ல் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை குடிநீர்த் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இனி எந்த திட்டத்திற்கும் நிர்வாக ஒப்புதல் 1-4-1992 வரை அளிக்க இயலாது என்று நிதித்துறை கூறியுள்ளது. இந்த நிதித் துறையின் குறிப்பின்மீது வாரியத்தின் அறிக்கை கேட்கப் பட்டுள்ளது. வாரியத்தின் கருத்து பெறப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி குடிநீர்த் திட்டம் மூலமாக திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார் பேட்டை ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களும், கிட்டத் தட்ட 94 கிராமங்கள் பயனடையக்கூடும். இந்தத் திட்டத்தை 'எசன்ஷியல் சர்வீஸ்' என்று கருதி, இந்த ஆண்டே துவங்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான டெக்னிக்கல் சேங்ஷன், தொழில்நுட்பக் குழுவினுடைய ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. அரசினுடைய நிர்வாக ஒப்புதலுக்காக இது அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தத் திட்டத்திற்குண்டான அமைப்புச் செலவை ஏற்கக்

கூடிய நகராட்சி மற்றும் பேரூராட்சிகளினுடைய தீர்மானங்கள் பெறப்படவில்லை. அதைக் கோரி, கடந்த 11-9-1991 அன்று வாரியத்திற்கு அரசு கடிதம் அனுப்பியிருக்கிறது. இந்த நிதி ஆண்டிலே குடிநீர்த் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதால் இனி எந்தத் திட்டத்திற்கும் நிர்வாக ஒப்புதல் 1—4—1992 வரை அளிக்க இயலாதென்று நிதித் துறை கூறியுள்ளது. இந்த நிதித் துறையின் குறிப்பின்மீது வாரியத்தின் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. வாரியத்தின் அறிக்கை பெறப்பட்ட பிறகு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சி, ' தட்டுங்கள் திறக்கப்படும் ', கேளுங்கள் கொடுக்கப்படும் ' என்ற பொன்மொழிக்கேற்ப நடக்கின்ற ஆட்சி, ஆதலால் மிக பணிவுடன் கேட்டுள்ளேன். எப்போது கொடுக்கப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறையின் குறிப்பின் மீது வாரியத்தின் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. வாரியத்தின் அறிக்கை கிடைத்த பிறகு ஆவன செய்யப்படுமென் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வணிகம்) தொழில் துறை தொடர்பான பத்திகள் குறித்து, பொது நிறுவனங்கள் குழு 1985-86 ஆம் ஆண்டு அளித்த முப்பத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 11-வது அறிக்கை, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் 1985-86 ஆம் ஆண்டு தினான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்